[1979 அக்டோபர் 31

ஆத்தூர் நகர குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா 51—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது இப்பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) சுமார் 23 கோடி ரூபாய்.

(இ) களப்பணிகள் முடிந்தவுடன் உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் நிர்வாக ஒப்புதல் பெற்று பணி தொடங்கப்படும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் இருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்குக் குடிநீர் கொடுக்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் உடனடியாகத் தொடங்கப்படுமா? அந்தத் திட்டத்தை செயல்படுத்தும்போது, வழியில் இருக்கின்ற எல்லா சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் குடிநீர் கொடுக்கப்படுவது என்பது சேர்க்கப்பட்டுள்ளதா? ஆத்தூர் நகரில் ஏற்கனவே குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட குடிநீர் திட்டம் சரியாக இல்லை, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது, அதற்கு மாற்றுத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தி, நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, . மேச்சேரி, ஓமலூர், சூரமங்கலம், ஜாகிர்கொண்டலம்பட்டி, ஆகிய சேலம்-ஆத்தூர் வழியில் உள்ள கிராமங்களுக்கும் சேர்த்து குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய மதிப்பீடு சுமார் ரூ. 23 கோடியாகும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வழியில் அதாவது, அயோத்தியபட்டினம், வாழப்பாடி, பெத்தநாய்க்கன் பாளையம் ஆகிய பேரூராட்சிகள் சேர்க்கப்படாமல் இருக்கின்றன. அதையும் சேர்த்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா? மேலும். ஆத்தூரில் ஒரு ஆண்டில் 6 மாதத்திற்கு குடிநீர்

1979 அக்டோபர் 31]

கிடைப்பது இல்லை. கிட்டத்தட்ட 2 லட்ச ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தும், தண்ணீர் கிடைக்கவில்லை. அது வீணான செலவு என்கிற வகையில் உள்ளது. ஆகவே, அந்த நிலைமையை உடனடியாகப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(பதில் இல்லை)

வேடப்பட்டி பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

* வினா 52—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவாணி திட்டத்தில் வேடப்பட்டி பேரூராட்சியை சேர்க்கும்படி பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் மீது என்ன முடிவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 3.84 லட்சத்திற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.30)

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, அந்தத் திட்டத்தில் எவ்வளவு மக்கள் பலன் பெறுவார்கள் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 5226-ல் 180-ஐ கழித்தால் எத்தனை வருமோ அத்தனை மக்கள் பயன்பெறுவார்கள்.

மதம் மாறிய கிறித்துவ அரிசனங்களுக்குச் சலுகைகள்.

* வினா 53—திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ மதத்தில் சேர்ந்த அரிசனங்களுக்கும் இந்து அரிசனங்களுக்கு கொடுக்கப்படும் எல்லா சலுகைகளையும் விஸ்தரித்துத்தர இந்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?